For Private Circulation Only

செப்டம்பர் 2012 மலர் 5 இதழ் 5

ஸ்ரீ ராம் சந்த்ர மிஷன்®

India ECHOES
ONE WORLD ONE HUMANITY





# வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த சிறப்பு ஒரு நாள் விழா

## சென்னை மணப்பாக்கத்தில் 2012 ஆகஸ்ட் 15

2012, ஆகஸ்ட் 11ம் தேதி, மாஸ்டர், பாபுஜி மெமோரியல் ஆசிரமத்தில், ஆகஸ்ட் 15ம் தேதி, செயற்குழுவின் சிறப்புக் கூட்டம் நடைபெற, அழைப்பு அனுப்பும்படி, சகோ. கம்லேஷ் பட்டேலிடம் கேட்டுக்கொண்டார். அடுத்த நாள் மாலை, மாஸ்டர், மணப்பாக்கம் ஆசிரம மேலாளரை அழைத்து, அன்றைய தினமே சிறப்பு ஒரு நாள் விழா நடத்த முடிவு செய்திருப்பதாகத் தெரிவித்தார். அவர், அப்யாசிகளை விழாவிற்கு அழைக்க, சகஜ் சந்தேஷ் மூலம் அனுப்ப வேண்டிய கடிதத்தின் வாசகங்களைத் தெரிவித்தார். அது, அப்யாசிகளின் சிறப்பு பொதுக்குழு கூட்டமாக இருக்கும்படியாகவும், மூன்று சத்சங்கங்கள், காலை 6.30 மணி, 11.00 மணி, மற்றும் பிற்பகல் 4.30 மணி ஆகிய நேரங்களில் நடைபெறவும் திட்டமிடப்பட்டது.

ஜூலை5 ம் தேதியில் இருந்து, மாஸ்டருக்கு, சிறுநீரக பகுதி மற்றும் குடலில் ஏற்பட்ட தொற்று நோயின் காரணமாக, தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டது. எப்போதும்போல், எதுவுமே முறையிடாமல், விவரிக்க இயலாத, சொல்லவொண்ணாத் துயரத்தில் இருந்தார். அது, மிஷனில் உள்ள அப்யாசிகளுக்கும் கவலையினை அளித்த காலக்கட்டமாக இருந்தது. சாதரணமாக உட்கொள்ளும் உணவு அளிப்பது நிறுத்தப்பட்டதால், அவரது எடை மிகவும் குறைந்தது. அவரது வாழ் நாளிலேயே இதுவரை இல்லாதபடி, அதிக நாட்கள் படுக்கையிலேயே, அசையக்கூட இயலாத நிலையில் இருக்க நேரிட்டது. எனவே, விழா பற்றிய அழைப்பு, உலகம் முழுவதும் உள்ள அப்யாசிகளை ஆச்சரியப்பட வைத்தது. ஆனால், அவரது இதயத்தில் இருந்து வந்த இந்த அழைப்பு, இரண்டு நாட்களுக்குள், இருபத்தொன்றாயிரம் அப்யாசிகளை, மணப்பாக்கத்திற்கு கொண்டு வந்து சேர்த்தது!ஒரு நாள் முன்பு தான் ,

"உங்களுடைய பதில், உங்களின் பேரளவிலான பதில், மென்குரல்களில் என் அன்புக்குரிய பாபூஜி மகராஜ் திரும்ப திரும்ப என்ன எழுதுகிறாரோ, அதனை எனக்குச் சுட்டிக்காட்டுகிறது: இதயங்கள் சத்தியத்திற்காகத் திறக்கத் தொடங்கி உள்ளன. மக்கள் ஆன்மீக வாழ்க்கையினை மென்மேலும் அதிக அளவில் விரும்புகின்றனர். மென்மேலும் அதில் தங்களை ஈடுபடுத்திக்கொள்ள சம்மதிக்கின்றனர். மென்மேலும் தங்களையே அர்ப்பணிக்கத் தயாராக உள்ளனர். இது ஒரு மிக நல்ல அறிகுறி"

15ஆகஸ்ட் 2012
மணப்பாக்கம், சென்னை





அதாவது ஆகஸ்ட் 11ம் தேதி, மாஸ்டர், 'PET/CT SCAN' பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டார். அதில் உள்ளார்ந்த பாதிப்பு எதுவும் தெரியாதது ஒரு நல்ல செய்தியாகும். மருத்துவர்களும் மகிழ்ச்சி தெரிவித்தனர். "பரிசோதனையின் முடிவு, எனக்கு பிரச்சினை ஏதும் இல்லையென சொன்ன பின்பும், இந்த மருத்துவர்கள் எனக்கு ஏன் மருந்து தருகிறார்கள்?" என மாஸ்டர் வினவ, அவ்வறையில் இருந்த அனைவரும் மனம் விட்டுச் சிரித்தனர்.

"பண்டாரா" நடக்கப்போகும் அறிக்கை வெளியிட்டவுடன், அதை செவ்வனே நடத்தி முடிக்க, மூன்று நாட்கள் மட்டுமே இருந்ததால், வேலைகள் மும்முரமாகவும், முழுவீச்சுடனும் நடை பெற ஆரம்பித்து விட்டன. பந்தல்கள் அமைப்பதில் வல்லுனரும், திருப்பூர் விழாக்களில் பந்தல்கள் அமைத்து அனுபவம் பெற்றவருமான திரு. பிரான்சிஸ், பெங்களூரிலிருந்து, தன் தளவாடங்களோடும், குழுவோடும் தருவிக்கப்பட்டிருந்தார். திருப்பூரிலிருந்து வந்திருந்த தன்னார்வத்தொண்டர்களும் தேவைக்கேற்ற உந்துதலால் வேலை செய்து, 10000-15000 அப்யாசிகள் தங்குவதற்கேற்ற இடங்களைத் தயார் செய்தனர். ஆசிரமத்தில் உள்ள குடியிருப்புகள், மற்றும் திறந்த வெளி முழுவதும், கூடாரங்களாலும், பந்தல்களாலும் நிரம்பியிருந்தது. தியான மண்டபத்தின் இரு புறங்களிலும் 25000 ச.அடி கொண்ட நான்கு கூடாரங்கள் அமைக்கப்பட்டன. அது தவிர 30000 ச. அடி பரப்பளவுள்ள "ஷாமியானா"வும் அமைக்கப்பட்டது.

அனைவருக்கும் இடவசதி செய்து கொடுப்பது ஒரு பெரிய சவாலாக இருந்தது. ஆசிரமத்தின் சுற்றுப்புறத்தில் வசிக்கும் அப்யாசிகள் பெரும்பாலானோர், தங்கள் இல்லங்களிலும், வருகை புரிந்த அப்யாசிகளுக்கு இடம் தந்து உதவினர். உண்மையான சகோதரத்துவத்தை இதன் மூலம் உணர முடிந்தது. இது தவிர, 'ஒமேகா' பள்ளியில் 1500 அப்யாசிகளும், அருகிலுள்ள தேவாலயத்தின் கல்யாண மண்டபத்தில் 900 அப்யாசிகளும் தங்க வைக்கப்பட்டனர். மொத்தத்தில், அப்யாசிகளுக்கான தங்கும் தேவைகள் அனைத்தும், சுமுகமான முறையில் கையாளப்பட்டன.

மாஸ்டரின் விருப்பத்திற்கிணங்க, ஆசிரமம் முழுவதும் விழாக்கோலம் பூண்டு, மலர்களாலும், வண்ண விளக்குகளாலும், மற்றவைகளாலும் அலங்கரிக்கப்பட்டிருந்தது. ஆகஸ்ட் 14ம் தேதியிலிருந்தே தியான மண்டபம், மாஸ்டரின் குடில், பாபூஜி மண்டபம், 'ருசி' கஃபே, ஆசிரமத்தின் நுழை வாயில் மற்றும் ஆசிரமத்தின் பெரும்பாலான இடங்கள் மலர்களாலும், வண்ண விளக்குகளாலும் அலங்கரிக்கப்பட்டிருந்தன. ஆசிரமம், பளிச்சென்று, தூய்மையாக இருப்பதையும், அப்யாசிகளால் நிரம்பி வழிவதையும் கேள்விப்பட்ட மாஸ்டர், சக்கர நாற்காலியில் உட்கார்ந்து சுற்றிப்பார்க்க முடிவெடுத்ததைக்கண்ட அங்குள்ளவர்கள் ஆச்சரியமுற்றனர். மருத்துவர்களை, முதலில், தன்னை குடிலின் வராந்தாவிற்கு கூட்டிக்கொண்டு போகச்சொன்னார். பாபூஜி மண்டபத்தின் விளக்குகளையும், அலங்காரங்களையும் பார்த்தவுடன், அங்கேயும் அழைத்துப்போகும்படி சொன்னார். அங்கிருந்து திரும்பும் பொழுது, குடிலின் நுழைவாயில் நோக்கி, கையால் சைகை செய்தார். அங்கிருந்து, தியான மண்டபத்தின் அலங்காரங்களை பார்வையிடச்சென்றார்.

மாஸ்டர் தியானக்கூடத்தைப் பார்ப்பதற்காக, புதிதாக அமைக்கப்பட்ட சரிவுப் பாதையின் வழியாக தியான கூடத்தின் உள்ளே நுழைந்து, மேடைக்கு வந்தார். அங்கு வேலை செய்து கொண்டிருந்த அப்யாசிகள், இரவு 8மணிக்கு மாஸ்டர் அங்கு வந்திருப்பதைப் பார்த்து, ஆச்சர்யமடைந்தனர். தியான கூடத்தின் அனைத்துப் பக்கங்களிலும், உட்கூரையிலிருந்து தூண்களின் மேற்பகுதி வரையிலும், அழகிய துணிமணிகளாலும், பூக்களாலும், ரோமானிய முறைப்படி அழகூட்டப்பட்டு















அலங்கரிக்கப்பட்டிருந்தது. மாஸ்டர் காட்டேஜிற்கு திரும்பி செல்லும் வழியில், அவரது முகம் ஒளி வீசியதைக் காண முடிந்தது.

அப்யாசிகள் அதிக அளவில் ஆசிரமத்திற்கு வந்து கொண்டே இருந்தனர். எங்கும் அப்யாசிகளாக இருந்தனர். அங்கே எங்குமே காலியாக இல்லை. இரவு முழுவதும் யாருமே தூங்கவில்லை. பெருந்திரளான மக்கள் கூட்டம் இருந்த போதிலும், அங்கு ஒரு விஷயம் கவனிக்கப்பட வேண்டியதாக இருந்தது. அங்கே அமைதியின்மை, பெரும் குழப்பம், முறையற்றதன்மை எதுவுமின்றி, அமைதியான சூழ்நிலை காணப்பட்டது. அங்கே எங்கு பார்த்தாலும், உதவிக்கரம் நீண்டது. காலை 6.30 மணி சத்சங்கம், சகோ. கமலேஷ் பட்டேல் அவர்களால் வழங்கப்பட்டது. அது ஒரு மணி நேரம் நீடித்தது. சத்சங்கம் முடிந்தவுடன், அனைத்து அப்யாசிகளும், தியானக் கூடத்தை விட்டு வெளியே வர ஆரம்பித்ததை, தியானகூடத்திலிருந்து பார்த்த பொழுது, அது பார்க்க வேண்டிய காட்சியாக இருந்தது. அமைதியான சூழ்நிலை மற்றும் தன் ஒழுக்கம் பரவலாக இருந்தது. எந்த ஒரு அப்யாசியும் அந்த இதமான சூழ்நிலையை, உடைக்க முயற்சிக்கவில்லை. மாஸ்டரின் காட்டேஜிற்குள் செல்லவும் யாரும் முயற்சிக்கவில்லை.

மாஸ்டர், தியானக் கூடத்திற்கு காலை 9.30 மணியளவில் வருவதற்கு திட்டமிட்டுள்ளதாகவும், அனைத்து அப்யாசிகளும் திரும்பவும் ஒன்று கூடுமாறும் கேட்டுக் கொள்ளப்பட்டனர். அதுதான் அன்றைக்கு உண்மையாகவே எதிர்பார்த்து காத்திருந்த நிகழ்வாக இருந்தது. காலை சுமார் 10.30 மணியளவில், மாஸ்டர், சுவாசிப்பதற்கு உதவியாக, பிராணவாயு உருளை பொருத்தப்பட்டு, சக்கர நாற்காலியில் தியான கூடத்திற்கு வருகை புரிந்தார். சமீப கால உடல் நலக் குறைவால், மாஸ்டர் உடல் ரீதியாக மிகவும் பாதிக்கப்பட்டிருந்தார். அவரைப் பார்த்தபொழுது, அவர் அதிகமான அளவில் பலவீனமடைந்திருப்பதைக் காண முடிந்தது. பேசும் ஒவ்வொரு வார்த்தைக்கும், அசைவுக்கும் அவர் உடலளவில் பெரும் முயற்சி எடுக்க வேண்டியிருந்தது.

வந்திருந்த அப்யாசிகளில் பெரும்பாலானோர், அவருடைய உடல் நிலை குறித்த கவலையுடன், நீண்ட இடைவெளிக்குப் பிறகு, மாஸ்டரை நேரடியாக பார்த்ததில் மகிழ்ச்சி அடைந்ததைக் காணமுடிந்தது. மாஸ்டர் பேசுகையில், தன்னுடைய சமீபகால உடல் நலக் குறைவையும், அதனால் அவருக்கு ஏற்பட்ட பாதிப்பையும் பற்றியும் கூறினார். அவர் மேலும் பேசுகையில், மிஷனின் தலைவர் பதவியை ராஜிநாமா செய்வதாகவும், அந்த இடத்திற்கு சகோ. கமலேஷ் பட்டேல் அவர்களை நியமிப்பதாகவும் கூறினார். இதனை நீங்கள் ஏற்றுக் கொள்கிறீர்களா? என்று மாஸ்டர், செயற்குழுவை கேட்ட பொழுது, அவர்கள் அதற்கு மாறாக, மாஸ்டர் கண்டிப்பாக மிஷனின் தலைவராகத் தொடர வேண்டுமென்றும், சகோ. கமலேஷ் பட்டேல் அவர்களை துணைத் தலைவராக நியமிக்கலாம் என்றும் ஆலோசனை வழங்கினர். மாஸ்டர் கூடியிருந்த கூட்டத்தினரிடையே கருத்து கேட்டார். அவர்கள் தங்கள் ஆதரவை பெருத்த கரவொலியுடன் வெளிப்படுத்தினர். மாஸ்டர், துணைத் தலைவரானவர், தலைவருடைய அதிகாரம், கடமை மற்றும் பொறுப்புகளை, மாஸ்டரின் வழிகாட்டுதல் மற்றும் நேரடிமேற்பார்வையின் கீழ் நிறைவேற்றுவார் எனக் கூறினார். இதற்குப் பிறகு, மாஸ்டர் 15 நிமிடங்களேயான குறுகிய நேர சத்சங்கம் வழங்கி, காட்டேஜிற்கு திரும்பினார். மாலை சத்சங்கம், சகோ. கமலேஷ் பட்டேல் அவர்களால் வழங்கப்பட்டது. அதற்கு முன்னர், செயற்குழுவின் செயலாளர், மற்றும் இணை செயலாளர், ஆகியோர், காலையில் நடைபெற்ற நிகழ்வு குறித்து விளக்கமளித்தனர். செயற்குழு, சகோ. கமலேஷ் பட்டேல் அவர்களைத் துணைத் தலைவராக நியமித்ததற்கான தீர்மானம், சத்சங்கத்திற்கு கூடியிருந்த அப்யாசிகளுக்கு படித்துக் காண்பிக்கப்பட்டது.

சத்சங்கத்திற்கு பின், சகோ.கமலேஷ் படேல் ஆற்றிய









உரையில், முக்கியமான இரு விஷயங்களைப் பற்றிக் கூறினார். முதலாவதாக, மிஷனில் வேலை செய்யவோ அல்லது சேவை செய்யவோ, குறிப்பிட்ட இடம் அல்லது பதவி தேவையில்லை என்பதும், மற்றொன்று, எவ்வாறு இந்தத் தருணத்தில், "ஒற்றுமையும் ஒருங்கிசைவும்" அவசியமாக உள்ளது என்பதும், மேலும் இது, சகோதர சகோதரியரிடையே, அனைத்து தருணங்களிலும், சூழ்நிலைகளிலும் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதும் ஆகும். பண்டாராவில், இருபத்தோராயிரம் மக்கள் கலந்து கொண்டனர் என்று மாஸ்டரிடம் கூறியபோது, அவர் எவ்வாறு மகிழ்ச்சியுற்றார் என்பதை சகோ.கமலேஷ் அப்யாசிகளுடன் பகிர்ந்து கொண்டார். மாஸ்டர், "சரியாக இரு நாட்களுக்கு முன் தான் அறிவித்தது, நிறைய பேர் வந்துள்ளனரே.... அவர்கள் அனைவரும் என் -மக்கள்!" என்று கூறி வியப்புற்றிருக்கிறார்.

மாலை சத்சங்கத்திற்கு பின், அப்யாசிகள் கலைந்து செல்லத் தொடங்கினர். ஆசிரமத்திற்கு வெளியில் உள்ள முதன்மை சாலையில் ஏற்பட்ட போக்குவரத்தை சமாளிப்பது, பெரிய சவாலாகவே இருந்தது. மாஸ்டர், தன் பதவியை விட்டு விலக எண்ணியதை விட்டு விட்டு, தொடர்ந்து தலைமைப் பொறுப்பில் தொடர, பெருந்தன்மையுடன் ஒப்புக் கொண்டது, பற்றுறுதி கொண்ட பக்தர்களின் மனதிலிருந்த துயரத்தை நீக்கியது. அதே சமயம், அவர் மிகுதியான அலுவலக பளுவில் பெரும்பாலானவற்றை, தனக்குப் பின் நியமிக்கப்பட்டுள்ளவரின் இளம் தோள்களில் மாற்றி வைக்கும், முக்கியமான முடிவையும் எடுத்துக் கொண்டிருந்தார்.



நினைவு, அன்பரை அன்பிற்குரியவர் அருகில் கொண்டு வருகிறது. இந்த நெருக்கத்திற்கு வரம்பு இல்லை. மாஸ்டர் மீதான அன்பு அல்லது ஈடுபாடு எந்த அளவு அதிகரிக்கின்றதோ, அந்த அளவிற்கு ஒருவர் மாஸ்டரை நெருங்குகிறார். இந்த உறவு, வாழையடி வாழையாக வரும் ஒன்று. அவரிடம் அதிக அளவு நெருக்கத்தை அடையும் வகையில் முன்னேறுவது நம் கையில்தான் உள்ளது.
"ராம் சந்த்ராவின் முழு படைப்புகள்" - பாகம்-1 என்ற புத்தகத்திலிருந்து எடுக்கப்பட்டது.

## மாஸ்டரின் அறிக்கை

### வியாழன், ஜூன் 21, 2012

மாஸ்டர் காயத்ரியில் இருந்தார். தனது பிறந்தநாளை திருப்பூரில் கொண்டாடலாம் என முடிவு செய்தார். இது மிக மகிழ்ச்சியான செய்தியாகும். 2011,ஜூலை மாதத்தில், பாபூஜியிடமிருந்து மாஸ்டர் பெற்றிருந்த இரு செய்திகளில், இத்தகைய விழாக்களின்போது ஒன்றுகூடுவதின் முக்கியத்துவம் பற்றியும், மேலும் வருடா வருடம் இது நடைபெற வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டிருந்தது. மாஸ்டர் இச்செய்தியை படிக்கையில், விழாவை நடத்தவும், அதை திருப்பூரில் நடத்தவும் முடிவு செய்தார். கடினமாக உழைத்து சம்பாதித்த பணத்தை, அப்யாசிகள் விழாவிற்கு பயணம் செய்வதில் செலவழிப்பது, அவருக்கு கவலையாக இருந்தது. விழாவிற்கு நன்கொடை என்று எதுவும் இருக்கக்கூடாது என்றும், அது முழுமையாக தன்னார்வத்துடன் கொடுப்பதாக மட்டுமே இருக்க வேண்டும் என்றும், குறிப்பிட்டுக் கூறினார்.

### வெள்ளி, ஜூன் 22, 2012

மாஸ்டர் ஆசிரமத்திற்கு வந்து, விசாகப்பட்டினம் மற்றும் ஆந்திர பிரதேசத்திலுள்ள மற்ற மையங்களிலிருந்து வந்திருந்த நிறைய அப்யாசிகளை, டார்ம்-Aஇல் சந்தித்தார். அது, மிகப் பெரிய கூட்டமாக, டார்ம் முழுவதும் நிறைந்திருந்தது. அனைவருமே மாஸ்டரை சந்திக்கக் கட்டாயப்படுத்தினர். மாஸ்டர் சத்சங்கமும், உரையும் வழங்கினார். தனது உரையில் "மூட பக்தி" பற்றியும், அது உண்மையான பிரச்சினை என்றும், அதில் ஒருவர் சிக்கிக்கொள்ளக் கூடாது என்றும் கூறினார். பதிலாக ஒருவர், பயிற்சியை குறிப்பிட்டுள்ளவாறு செய்து, சகஜ மார்க்கத்தின் பலனைப் பார்க்கவேண்டும் என்றும், மற்றும், பழைய முறை வழிபாட்டையும், பழக்கவழக்கங்களையும், உண்மையான முன்னேற்றத்திற்காக விட்டு விடுதல் வேண்டும் என்றும் கூறினார். நிறைய மக்களை பொறுமையாகக் கடந்து வந்து, பின் மாஸ்டர் குடிலுக்குள் சென்றார்.

மாஸ்டர், ஒரு வயது முதிர்ந்த சகோதரிக்கு பரிசாக வழங்க, ஒரு சக்கர நாற்காலி வாங்க, மதியம் ஏற்பாடு செய்திருந்தார். மாலையில் அவர், ஆசிரமத்தில், அந்த அப்யாசி இருந்த இடத்திற்கு சென்று, அதை அந்த சகோதரிக்கு பரிசாகத் தந்தார். அது ஒரு இனிமையான தருணமாக இருந்தது. தான் நன்கு அறிந்திருந்த ஒரு வயது முதிர்ந்த மூதாட்டியின் மீது, மாஸ்டர் கொண்டிருந்த அன்பையும், அக்கறையையும், எல்லோராலும் உணர முடிந்தது. அதற்குப் பிறகு, மாஸ்டர் தனது கால்ஃப் வண்டியில் தொடர்ந்து சென்று, நிறைய அப்யாசிகளைச் சந்தித்தார். அவர் சிற்றுண்டியகத்திற்குப்





பக்கத்தில் தாமதித்தார். அங்கிருந்து சில திண்பண்டங்கள் கொண்டு வரப்பட்டன. அவர் அதைச் சாப்பிட்டு விட்டு, அவரைச் சுற்றி இருந்தவர்களுக்கும் பகிர்ந்தளித்தார். மாஸ்டர் அதன் பிறகு காட்டேஜுக்கு வந்து தனது வேலையைத் தொடங்கினார்.

## சனிக்கிழமை ஜூன் 23, 2012

காலையில், சுமார் 15, 20 அப்யாசிகள் திருப்பூரிலிருந்து வந்திருந்தனர். மாஸ்டர் அவர்களில் ஓரிருவருடன் தனது படுக்கையறையில் பேசிக்கொண்டு இருந்தார். மாஸ்டர் அதன் பிறகு அவர்கள் அனைவரையும் சந்தித்து, காலை உணவிற்குப் பின்னர் மீண்டும் அவர்களைச் சந்திப்பதாகச் சொல்லி, அங்கே இருந்த அனைவருக்கும் பிரசாதம் வழங்கினார். காலை உணவிற்குப் பின்னர், மாஸ்டர் கூடத்திற்கு வந்தார். எல்லா அப்யாசிகளும் அவரைச் சுற்றி அமர்ந்தனர். "என்னைக் கேள்வி கேளுங்கள்" என்று மாஸ்டர் சொன்னார். அவர் இதை, வரப்போகும் உத்சவதிற்கான எல்லா சந்தேகங்களும் கேள்விகளும், தெளிவாக்கப்படுவதை உறுதி செய்யும் வண்ணம், ஒரு தடவைக்கு மேல் அதிகமாகச் சொன்னார்.

ஒரு அப்யாசி மாஸ்டரிடம், "வேலை செய்ய வாய்ப்பு வரும் போது நான் மிகவும் உற்சாகமடைந்து பொறுமையை இழக்கிறேன்" என்று சொன்னார்.மாஸ்டர் அவருக்குப் பதிலளிக்கும் விதமாக, எப்போதெல்லாம் ஒரு முடிவு எடுக்க வேண்டி வருகிறதோ, அப்போது சிறிது தாமதிக்க வேண்டும், சில ஆழமான சுவாசங்களை எடுக்க வேண்டும் அல்லது ஆகாயத்தைப் பார்த்து விட்டுப் பிறகு முடிவு செய்ய வேண்டும்.நீங்கள் சிறிது நேரம் தாமதித்து அமைதி காக்கக் கற்றுக்கொள்ள வேண்டும் என்று சொல்லி விட்டு அவர் தானே ஆழ்ந்த சுவாசங்களை எடுத்தும், மேலே நிமிர்ந்து பார்த்தும் அதைச் செய்து காண்பித்தார்.அவர் அதன் பிறகு " வேலை நம்மை மிகவும் வசீகரிக்கச் செய்யும் ஆகவே நாம் மிகவும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்." என்று சொன்னார்.

## ஞாயிற்றுக்கிழமை ஜூன் 24, 2012

சுமார் ஒரு மணி நேரம் நீடித்த காலை சத்சங்கத்தின் போது, மாஸ்டர் சகோ.கமலேஷ் ஐ தனக்குப் பக்கத்தில் அமர்ந்து கொள்ளச் சொன்னார். சத்சங்கத்தின் முடிவில் கமலேஷ் உடல் நலக்குறைவாக உணர்ந்தார். அதன் பிறகு அவருக்கு ஏதோ சில வைரஸ் கிருமிகளின் பாதிப்பு ஏற்பட்டு ஒரு வாரத்திற்கும் அதிகமாக அவர் உடல் நலமின்றி இருந்தார்.

## 25-29 ஜூன் 2012

மாஸ்டர் இந்த வாரத்தில் பெரும்பாலும் சுகமில்லமல் இருந்தார். அவர் நிறைய ஓய்வு எடுத்துக் கொண்டிருந்தார். அப்யாசிகளைச் சந்திக்கவில்லை. வெள்ளிக்கிழமை மாலை, இரவு நேர உணவிற்குப் பின்னர், தனியாக அமர்ந்து கொண்டு, ஷோபா குர்து பாடிய, "மாரோ ப்ரணாம்" பாடலைக் கேட்டுக் கொண்டிருந்தார். மாஸ்டர் அந்தப் பாடலினால் மிகவும் கவரப்பட்டு, அதை அனுபவித்துக் கேட்டுக் கொண்டிருந்தார். அங்கே இருந்த அனைவருக்கும், அமைதியாக அமர்ந்து கொண்டு அந்த பாடலைக் கேட்டுக்கொண்டிருப்பது, ஒரு மிகச் சிறந்த அனுபவமாக இருந்தது.

## ஞாயிற்றுக்கிழமை ஜூலை 1, 2012

மாஸ்டர் அதிகாலையிலேயே எழுந்து, சத்சங்கம் நடத்துவதற்குத் தயாரானார். சத்சங்கத்திற்குப் பிறகு, சகோ.ஆதித்யாவுடனும் அவரது அன்னை சகோதரி சுஜாதாவுடனும் அவர் நீண்ட நேரம் உரையாடிக்கொண்டிருந்தார். ஆதித்யா, மாஸ்டரின் சகோதரரின் பேரன் ஆவார். அவர்கள், குடும்பத்தில் ஒரு கல்யாணத்தில் பங்கேற்பதற்காக இந்தியா வந்திருந்தபோது, மாஸ்டரைப் பார்க்க வந்திருந்தனர். மாஸ்டர் ஆதித்யாவிடம் குறிப்பான கவனம் செலுத்துவதைக் காண முடிந்தது.

மாஸ்டர், காலை சத்சங்கத்தைப் பற்றிப் பேசிக்கொண்டிருந்தார். ஒரு அப்யாசி, அது ஒரு மணி நேரம் ஐந்து நிமிடங்கள் இருந்ததாகச் சொன்னர். மாஸ்டர் அவரைத் திருத்தி, மிகச் சரியாகச் சொல்வதானால் ஒரு மணி நேரம் ஏழு நிமிடங்கள் என்றார். மாஸ்டர் அது ஒரு அதியற்புதமான சிட்டிங் என்று சொன்னார். அவர் வேறு ஒரு நட்சத்திர மண்டலத்தில், ஒரு இருண்ட பள்ளத்திற்குள் உறிஞ்சப் படுவதைப் போல் உணர்ந்தார்.

அந்த கலந்துரையடலுக்குப் பிறகு, மாஸ்டர் ஹோசூரிலிருந்து வந்திருந்த அப்யாசிகளைச் சந்தித்து, அவர்களது குடியிருப்பு பகுதிக்கான நிலபப்த்திரங்களை, அவர்களுக்குப் பகிர்ந்தளித்தார். அவர்கள் சுமார் அறுபது பேர் இருந்தனர். அது மாஸ்டருக்கு மிகவும் சோர்வைத் தந்தது. அவர் ஓய்வெடுக்கச் சென்று, பின் மாலை சுமார் ஏழு மணியளவிலேயே எழுந்தார். அவர் எழுந்து தயாரானவுடனேயே, அப்போதுதான் கொல்கத்தாவிலிருந்து வந்திருந்த அப்யாசிகளின், மிகப் பெரிய குழுவைச் சந்தித்தார். அந்தச் சந்திப்பு அவரது படுக்கையறையிலே நடந்தது. மேலும் அது முழுமையான அமைதி நிறைந்ததாக இருந்தது.

ஒருவரும் பேசவில்லையென்றாலும், அந்த அமைதியான



பகிர்வில், மாஸ்டரின் அன்பை அனைவரும் உணர முடிந்தது.

மாஸ்டர் சில ஆசிரம கட்டுமானம் தொடர்புள்ள நிகழ்ச்சிகளை, தொலைக்காட்சியில் பார்த்தார். அலுவலக அறையிலேயே இரவு உணவை முடித்துவிட்டு, பிறகு ஒரு அப்யாசியின் நடன அரங்கேற்றத்தை நேரலை நிகழ்ச்சியாகப் பார்த்தார்.

ஜூலை 3 செவ்வாய்க்கிழமை அன்று குருபூர்ணிமா. அந்த சிறப்பான நாளில், காலை 6 மணிக்கு முன்பாகவே நிறைய அப்யாசிகள் மாஸ்டரின் குடியிருப்பில் மாஸ்டரின் ஆசிர்வாதத்தைப் பெறக் குழுமியிருந்தனர். மாஸ்டர் பொறுமையாக அனைவரையும் சந்தித்து, அவர்களை ஆசிர்வதித்தார். மாஸ்டர் "நான் என் மாஸ்டரிடம் சென்றிருந்தபோது, குருபூர்ணிமாவைப் பற்றி எனக்கு எதுவும் தெரியாது. எனக்கு 40 வயது ஆகியிருந்தது. பாபூஜி, 40 மடங்கு விரைவாக முன்னேறுவாய் என்று கூறினார். அதைப் போன்றே நானும் உங்கள் அனைவரையும் ஆசிர்வதிக்கிறேன்" என்று கூறினார்.

ஒரு மணி நேரம் நீடித்த காலை சத்சங்கத்திற்குப் பிறகு, மாஸ்டர் 9 திருமணங்களை நடத்தி வைத்து, இரண்டு பஜனைப் பாடல்களைக் கேட்டபின், தன் அறைக்குத் திரும்பினார். ஒவ்வொருவரும் மாஸ்டரை சந்திக்க விரும்பியதால், அன்று அதிக அழுத்தமான சூழ்நிலை இருந்தது. ஆனால் மாஸ்டர் களைப்பாக இருந்ததால், ஓய்வெடுக்கச் சென்றார்.

## ஞாயிற்றுக்கிழமை, ஜூலை 8, 2012

மாஸ்டர் இந்த வாரத்தில் பெரும்பாலும் உடல் நலமின்றிக் காணப்பட்டார். 9ம் தேதி காயத்ரிக்குச் சென்று, வார இறுதிக்குள் ஆசிரமத்திற்கு திரும்ப திட்டமிட்டிருந்தார்.

மாஸ்டர் காயத்ரியில் நல்ல மன நிலையில் இருந்தார். ஆனால் அவரது உடல்நிலை, அன்றாட அடிப்படையில், நல்ல நிலையிலிருந்து மோசமான நிலைக்கு சென்று கொண்டிருந்தது. அவரது உடல்நிலையின் இந்த உடனடி மாற்றம், பார்ப்பதற்கு வருத்தத்தை ஏற்படுத்துகிறது. முந்தைய நாள் இரவு அவரது உடல்நிலை சுகமில்லாததால், ஓய்வெடுக்க, சீக்கிரமாகவே படுக்கைக்கு சென்றுவிட்டார். மாஸ்டர் காலையில் ஒருவிதமான மகிழ்ச்சியான மனநிலையில் இருந்தது, நம்ப முடியாததாக இருந்தது. அவர், திருப்பூரில் பணிகளின் முன்னேற்றம் தொடர்பாக, ஒரு செய்தியை விழாக்குழுவிற்கு அனுப்பினார். மாஸ்டர், "பணிகளின் துரிதமான முன்னேற்றம் பற்றி ஆச்சர்யப்படுவதற்கு ஒன்றுமில்லை. அன்புடன் அது செய்யப்படும் போது, ஒட்டுமொத்த இயற்கையும் ஒத்துழைக்கிறது. நான் எப்பொழுதும், அனைத்து வேதனைகளிலும் ஒன்பது மாதங்களாக தன் குழந்தையை சுமக்கும் தாயை, தன் பொன்னான நம்பிக்கையால் பிறக்கும் குழந்தையின் எதிர்காலத்திற்கு துணைபுரிந்துகொண்டு, தன் அன்பினால் மட்டுமே முழுவதும் துணைபுரிந்துகொண்டிருக்கும், ஒரு தாயை நினைவு கூர்கிறேன். அதுபோன்றதொரு அன்பு, நம் அனைத்து அப்யாசிகளையும் ஆசீர்வதிக்க வரவேண்டும் எனப் பிரார்த்தனை செய்கிறேன்" என்று கூறினார். மாஸ்டர் பிறகு தாயைப் பற்றிய இந்த கருத்தையும், "வாழ்க்கையின் மரம்" என்று அவர் அழைப்பதைப் பற்றியும் விரிவாகக் கூறினார். மேலும் ஒரு மரத்தின் படத்தையும் வரைந்து, இந்த கருத்தை விளக்க முயற்சி மேற்கொண்டார்.

மாஸ்டர், ஜூலை 14 சனிக்கிழமை அன்று, ஆசிரமத்திற்கு திரும்பினார். அவர் உடல்நிலை சரியாக இல்லை. 15ம் தேதி, மிகவும் உடல்நிலை சுகமில்லை என்பதை உணர்ந்ததால், தன் பிறந்தநாள் விழாக் கொண்டாட்டத்திற்கு, திருப்பூர் செல்லும் தன் திட்டத்தை கைவிட்டார்.

மாஸ்டர், புதிதாக கட்டப்பட்ட, தகவல் தொடர்பு ஊடக அறையை திறந்துவைக்கும் திட்டம் கொண்டிருந்தார். ஆனால் அவர் உடல் நலமில்லாததால், சகோ.கமலேஷ் அதை திறந்து வைத்தார். ஊடக அறை நவீன தொழில் நுட்பத்துடன், பல சதுர அறைகளைக் கொண்டுள்ளது. தகவல் தொடர்பு சேவை பகுதி, 100சதவீதம் ஒலிஆதாரத்துடன் (sound proof) ஒலிப்பதிவு செய்வதற்கு ஏற்றவாறு கட்டப்பட்டுள்ளது.

தொடர்ந்து மூன்று வாரங்களாக மாஸ்டரின் உடல்நிலை, சரியில்லாமல் இருந்தது. ஆனால் இப்பொழுது அவர், மெதுவாக உடல் நிலை தேறிவருகிறார். ஆசிரமம் ஜூலை இறுதிவரை மூடப்பட்டிருந்தது. திருப்பூர் விழாவிற்கு பிறகு மணப்பாக்கம் செல்ல திட்டமிட்டிருந்த அப்யாசிகள், மாற்று ஏற்பாடுகள் செய்துகொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்பட்டனர். குறிப்பிட்ட இடைவெளிகளில் வெளியிடப்பட்ட மருத்துவர்களின் அறிக்கைகள் மூலம், மாஸ்டரின் உடல்நலம் மெதுவாக இயல்புநிலைக்கு திரும்புவது, அனைத்து அப்யாசிகளுக்கும், அறிவிக்கப்பட்டது. அனைத்து சகோதர சகோதரிகளும், நமது அன்புக்குரிய மாஸ்டரின் உடல்நலம் விரைவாக குணமாகவும், அவரது உடல் ஆரோக்கியத்திற்கும், அவர் நீண்ட நாள் வாழவும், தொடர்ந்து பிரார்த்தனை செய்யுமாறு வேண்டுகிறோம்.







# புதிய வெளியீடுகள்

திருப்பூரில் நடைபெற்ற, மங்களகரமான நிகழ்ச்சியாகிய, மாஸ்டருடைய 86-வது பிறந்தநாள் விழாவின்போது, 20 புத்தகங்களும், 8 ஒலி-ஒளி படைப்புகளும் வெளியிடப்பட்டன. கண்ணாடி, கான்வாஸ் மற்றும் வெள்ளி ஒட்டுப்பலகையில் பொறித்தல் ஆகியவற்றிலான சிறப்பு புகைப்படத் தொகுதி ஒன்று வெளியிடப்பட்டது. இவற்றிற்கான முன்பதிவுகள் நடந்துகொண்டிருக்கின்றன. இவை, முன்கூட்டியே பணம் செலுத்தி பதிவுசெய்துகொள்வதன் மூலம் கிடைக்கும். விருப்பமுள்ள அப்யாசிகள் july24.photos@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரியை தொடர்பு கொள்ளலாம். புகைப்படக் காட்சியகத்தில், பல்வேறு மூலப்பொருட்களினாலான நூற்றுக்கணக்கான புகைப்படங்கள் பல்வேறு விலைகளில் இருந்தன.

## ஒலி-ஒளிப் பேழைகளின் வெளியீடு

விஸ்பர்ஸ் ~ஃப்ரெஞ்சு MP3




ஹி, ஹூக்கா & ஐ - ஆங்கிலம்DVD




சகஜ் மார்க் மென்டரிங்ஸ் - ஆங்கிலம் DVD




மாஸ்டர்ஸ் டாக் டு ப்ரிசெப்டர்ஸ்- வால்யூம் 1 & 11 - ஆங்கிலம் MP3




சென்னையிலும் கோயம்புத்தூரிலும் மாஸ்டர் ஆற்றிய உரைகள் தமிழ் DVD



தி எடெர்னல் பவர் ஆ~ஃப் லவ் - வால்யூம் I ஆங்கிலம் DVD




மாஸ்டர்ஸ் சாய்ஸ் - வால்யூம் IV MP3




இன்னர் ரி~ஃப்லெக்ஷன்ஸ் - வால்யூம் II - ஆங்கிலம் MP3




## புதிய புத்தகங்கள்

ஹி, ஹூக்கா & ஐ - ஆங்கிலம்




கமென்ட்ரி ஆன் டென் மாக்ஸிம்ஸ் ஆ~ஃப் சகஜ் மார்க் - ஆங்கிலம்




அப்யாசி டைரி




ப்ரிபெக்ட் டைரெக்டரி




காமிக் புக் டிமோத்தி- ஆங்கிலம்




மெசேஜஸ் யுனிவர்சல் 11



தமிழ்
தெலுங்கு
மராத்தி
குஜராத்தி
கன்னடம்
மலையாளம்

ப்ரின்சிபிள்ஸ் ஆ~ஃப் சகஜ் மார்க்- வால்யூம் 15 - ஆங்கிலம்




தி பர்ஸ்யூட் ஆ~ஃப் தி இன்னர் வே - ஆங்கிலம்



# மாஸ்டரின் 86வது பிறந்தநாள் கொண்டாட்டங்கள்

அஸ்ஸாம் - திப்ருகரை சேர்ந்த அப்யாசிகள், இந்தநாளை மிகுந்த உற்சாகத்துடன் கொண்டாடினர். ஒரு குழந்தை, 'பிறந்த நாள் வாழ்த்துக்கள்' என்னும் பொருள்பட வாசித்தது. ஒரு சகோதரி பஜனைகள் பாடினார். மாஸ்டரின் இரண்டு சிற்றுரைகள் VCD-யில் காட்டப்பட்டதை தொடர்ந்து, காலை உணவு மற்றும் பிரசாதத்துடன், இந்த நிகழ்ச்சி நிறைவு பெற்றது.

அலகாபாத் - சத்சங்கத்தை தொடர்ந்து, குழந்தைகளின் ஒரு நடன நிகழ்ச்சி, மாஸ்டரின் விருப்பத்திற்குரிய பஜனைகளை சகோதரிகள் பாடியது, மற்றும் இளைஞர்குழு மாஸ்டரின் பிறந்த நாள் பாடலைப் பாடியது ஆகியன, இந்த பகுதியின் முக்கிய நிகழ்வுகள் ஆகும். ஏறத்தாழ 600 அப்பாசிகள் மாஸ்டரை வாழ்த்தவும் பாடவும் இணைந்தனர். தியான கூடத்தைச் சுற்றிலும், அப்யாசிகளால் வேப்பங்கன்றுகள் நடப்பட்டன. சகோதரி நிஷா மற்றும் குழுவினர், ஒரு கலந்துரையாடல் பகுதியை நடத்தினர். மாலை சத்சங்கத்துடன் நிகழ்ச்சி நிறைவுபெற்றது.

லக்னௌ -200-க்கும் அதிகமான அப்யாசிகள் மூன்று நாள் கொண்டாட்டங்களில் கலந்து கொண்டனர். ஜூலை 23அன்று, காலை தியானத்தைற்குப்பின், சிந்தனையைத் தூண்டும் சில உரைகள் இருந்தன. அப்யாசிகள் சிலர், தங்கள் அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டனர். 24ம் தேதியன்று, பலத்த மழை இருந்த போதிலும், ஆசிரமத்திற்கு 300 அப்யாசிகள் வந்து சேர்ந்தனர். அன்று காலை தியானத்தைத் தொடர்ந்து நடைபெற்ற குழந்தைகளின் நிகழ்ச்சிகள், அப்யாசிகளின் இதயத்தைத் தொட்டன. மேலும், ஒரு கலந்துரையாடல் நிகழ்ச்சி, கேட்போரை வசீகரித்தது.

பஞ்சாப் மற்றும் ஹரியானா: பஞ்சாப் மற்றும் ஹரியானாவின் அப்யாசிகள் மாஸ்டரின் பிறந்தநாளை அவரவர்களது மையங்களில் கொண்டாடினர். சோனெபட்டில் மூன்று நாள் கொண்டாட்டங்கள் நடைபெற்றது. இதில் சுமார் நூறு அப்யாசிகள் பங்கேற்றனர். சத்சங்கத்துடன் மாஸ்டரின் CD லாலாஜியின் வாழ்க்கை பற்றிய படம் மற்றும் DVD ஆகியனவும் ஒளிபரப்பப்பட்டன. பாட்டியாலாவில் குழந்தைகளுக்கான வரைதல் மற்றும் எழுதுதல் போட்டிகள் நடத்தப்பட்டன. மூன்று நாட்களில், மூன்று சத்சங்கங்கள் நடைபெற்றன. சண்டிகரில் சுமார் ஐம்பத்தைந்து அப்யாசிகள் பங்கேற்றனர். அன்று மாலை, மாஸ்டரின் உடல் நலத்தில் ஏற்பட்ட முன்னேற்றம் குறித்த தகவல், அனைத்து அப்யாசிகளுக்கும் உற்சாகத்தைத் தந்தது.

கொல்கத்தா ஆசிரமம் - ஜூலை 23 முதல் 25 வரை நடைபெற்ற கொண்டாட்டங்களில், கொல்கத்தாவைச் சேர்ந்த ஏறத்தாழ 300 அப்யாசிகளும், ஜார்கண்ட், பண்டேல், சாந்திபூர் மற்றும் பல துணைமையங்களிலிருந்து, 50 அப்யாசிகளும் கலந்து கொண்டனர். 24 ஆம் தேதியன்று, இரபீந்தர சங்கீத், பஜனைகள், மாஸ்டரின் பயண DVD க்களின் ஒளிபரப்பு, மூத்த அப்யாசிகள் அனுபவங்களைப் பகிர்தல், சகஜ மார்க்க பயிற்சிமுறை செய்வதின் முக்கியத்துவம் மற்றும் பண்டாராக்களில் கலந்து கொள்வதின் முக்கியத்துவம் ஆகியன பற்றிய உரைகள், ஆகியவை இடம் பெற்றன. அதனைத் தொடர்ந்து, சகஜ மார்க்க முறையின் அம்சங்கள் பற்றிய கலந்துரையாடல்கள் இருந்தன.

மதிய உணவிற்குப் பின்னர் இடம்பெற்ற ஹிந்தி மற்றும் ஆங்கில மொழிகளில் மாஸ்டரின் உரைகள், மாஸ்டரின், "நினைவலைகளின் வழியே " (Down Memory Lane) பற்றிய கருத்துரை, ஆகியவை, அன்புக்குரியவரின் நினைவில் ஆழ்ந்து இருக்க உதவின.

இராஜஸ்தான்

ஜெய்ப்பூர்: மூன்று தினங்களிலும், காலை 7.30 மணிக்கும் மற்றும் மாலை 5.00 மணிக்கும் சத்சங்கங்கள் நடைபெற்றன. இதில் 280 அப்யாசிகள் மற்றும் 65 குழந்தைகள் கலந்து கொண்டனர். 24 ஆம் தேதியன்று, குழந்தைகள் ஒரு பாடலைப் பாடியதுடன், கலை நிகழ்ச்சிகளிலும் கலந்துகொண்டனர். சகோதரர் தருண், சகோதரி அஞ்சலி, மற்றும் சகோதரர் அனில் ஆசியோர் சகஜ மார்க்கத்தின் பல்வேறு அம்சங்கள் பற்றி உரையாற்றினர். 25-ஆம் தேதியன்று, பாபூஜி மகராஜை புகழ்ந்து, சகோதரி ரமா கொச்சர் ஒரு பக்தி பாடலைப் பாடினார்.

உதய்பூர்: காலை சத்சங்கத்திற்குப் பின்னர் மாஸ்டரின் வாழ்க்கை வரலாறு படிக்கப்பட்டதுடன், சகஜ மார்க்க முறையின் செயல்திறன்கள் குறித்தும் விவாதிக்கப்பட்டது. சகோதரிகளின் பஜனைப் பாடல்களைத் தொடர்ந்து, ஒரு குழு விவாதம் நடைபெற்றது. குழந்தைகள் பல்வேறு பாடல்களைப் பாடினர். அனைத்து அப்யாசிகளும் ஒரு ஆன்மீக விளையாட்டை விளையாடினர். மற்றும் அவர்களுக்கு, தலைப்புகளிலிருந்து ஏதாவது ஒன்றைத் தேரந்தெடுத்து அது பற்றி பேசுவதற்கு வாய்ப்பும் கொடுக்கப்பட்டது.

ஜோத்பூர்: மூன்று நாள் கொண்டாட்டங்களில், 275 அப்யாசிகள் கலந்து கொண்டனர். அப்யாசிகள் பஜனைகளைப் பாடியதுடன், தன்னார்வத் தொண்டுகளிலும் ஈடுபட்டனர். ஒவ்வொரு உடல் நலக் குறைவிற்கும் ஆன்மீக சாதனையே மருந்தாகும் என்னும் வகையில் விவாதிக்கப்பட்டது. அப்யாசிகள் சகஜ மார்க்கத்தில் சேர்ந்தபின் ஏற்பட்ட அனுபவங்களை பகிர்ந்து கொண்டனர். அனைவரும் மாஸ்டரின் உடல்நலத்திற்காக பிரார்த்தனை செய்தனர்.

அஜ்மீர்: காலை 7.30 மணி சத்சங்கத்திற்கு, 48 அப்யாசிகள் குழுமியிருந்தனர். மாஸ்டரின் ஒலியுரைகள், சிறப்பு மென்குரல் செய்திகள் படித்தல், மற்றும் மாஸ்டரின் உரைகளிலிருந்து எடுத்தாளப்பட்ட பகுதிகளின் தொகுப்பைப் படித்தல் ஆகியவை, நிகழ்ச்சிகளின் பகுதிகளாக இடம்பெற்றன. அப்யாசிகள் மற்றும் குழந்தைகளின் பஜனைகளும், கவிதைகளும், மேலும், சாரிஜி மற்றும் அவரின் வாழ்க்கை குறித்த வினாடி வினா நிகழ்ச்சியும் அந்த நாளைக்கு ஏற்ற மனநிலையை ஏற்படுத்தியது. சகோதரர் P.K. அரோரா, பண்டாராக்களில் கலந்து கொள்வதின் முக்கியத்துவம் குறித்துப் பேசினார். காலை 11.00 மணி சத்சங்கத்தைத் தொடர்ந்து வீடியோ உரை இருந்தது. மாலை சத்சங்கம், சகோதரர் P.K.அரோராவின் இல்லத்தில் நடைபெற்றது.

அல்வர்: அல்வர் 'யோகாசிரமத்தில்,' ஜூலை 23 முதல் 25 ஆம் தேதிகளில், அல்வர் மற்றும் அதனருகிலுள்ள ராஜ்ஹர், கயிர்தல், கொட்புட்லி, பண்டி குய், மஹ்வா மற்றும் பில்வா ஆகிய இடங்களிலிருந்து, சுமார்160அப்யாசிகள்,கொண்டாட்டங்களில் கலந்து கொண்டனர்.அப்யாசிகள்,மாஸ்டரின்வாழ்க்கை, தன்னலமற்ற அன்பு மற்றும் சேவை போன்ற பல நற்பண்புகளை எடுத்துக் காட்டுவதாக அமைந்துள்ளதை நினைவு கூர்ந்தனர்.

ஸ்ரீ கங்காநகர்: சகோதரர் P.K. மிதாவின் வீட்டில், சுமார் 130 அப்யாசிகள் மற்றும் முப்பது குழந்தைகள் கூடி இருந்தனர். காலைச் சத்சங்கத்தைத் தொடர்ந்து,மாஸ்டரின் வாழ்க்கை குறித்த புத்தகம் படிக்கப்பட்டது. பாடல்களை ஒப்புவித்தல் மற்றும் 'குரு பூர்ணிமா' பற்றி ஒரு படம் ஆகியவை இருந்தன. மாலையில் குழந்தைகள்,பாடல்கள் மற்றும் கவிதைகளை வழங்கினர்.

பில்வாரா: காலை7.30சத்சங்கத்திற்குப் பின்,மாஸ்டரின் விருப்பங்கள் என்ற தொகுப்பிலிருந்து பஜனைகள் வழங்கப்பட்டன. சில கவிதைகளையும் மற்றும் பஜனைகளையும்,அப்யாசிகளும் அவர்களது குழந்தைகளும் வழங்கினர். "சத்யோதயம்" என்ற புத்தகத்திலிருந்து எடுத்தாளப்பட்ட பகுதிகளின் தொகுப்பைப் படித்தனர். நிகழ்ச்சியின் நிறைவாக "இன்சான் பனோ" என்ற CDஒலிபரப்பப்பட்டது. காலை தியானத்தில்50 அப்யாசிகளும்,மற்றும் மாலையில் 21 அப்யாசிகளும் பங்குபெற்றனர்.

# செய்தியைப் பரப்புதல்...



## ஆசிரியர்களை ஊக்கப்படுத்துதல், காசிபூர், உத்தரகண்ட்

ஒரு முழுநாள் நிகழ்ச்சியின்போது, அப்யாசிகள் மூன்று குழுக்களாக பிரிக்கப்பட்டு, பொதுவாக புதிதாய் வரும் ஆன்மீக ஆர்வலர்கள் கேட்கும் கேள்விகளை பட்டியலிடுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டனர். பின்னர், இரண்டு அப்யாசிகள் நேருக்கு நேராக அமர்த்தப்பட்டு, மாதிரி கேள்வி-பதில் பகுதி ஒன்று நடத்தப்பட்டது. அப்போது பல கேள்விகள் எழுந்தன. இதன் மூலம், பயிற்சியின் அடிப்படைகள் பற்றியும் புதிய ஆர்வலர்களுக்கு என்ன சொல்லவேண்டும் என்பது பற்றியும் நாம் தெரிந்துவைத்திருக்கவேண்டியதன் முக்கியத்துவத்தை நாங்கள் உணர்ந்தோம்.

அதன் பின்னர், பள்ளி நடத்தும் சகோதரர் ஒருவர் ஓர் ஆசிரியர் குழுவை ஊக்கப்படுத்தி, ஆகஸ்ட் 7-ம் தேதி, ஒரு கூட்டத்தை நடத்தினார். அந்த ஆசிரியர்களுக்கு, ஏற்கெனவே சகஜ மார்க்கத்தைப் பற்றிய சுருக்கமும், துண்டு பிரசுரங்களும், கொடுக்கப்பட்டிருந்தன. கூட்டத்தில், சிறிய, தனிப்பட்ட குறிக்கோள்கள் மற்றும் மனித வாழ்வின் உண்மையான லட்சியம் ஆகிய இரண்டினைப் பற்றிய புரிதலையும், இவ்விரண்டிற்குமிடையே உள்ள வேறுபாட்டையும் குறித்து உரையாற்றப்பட்டது. அதன் பின்னர், மதத்திலிருந்து ஆன்மீகத்திற்கு முன்னேறுவதைப் பற்றிய உரையைத் தொடர்ந்து, பயிற்சியைப் புரிந்துகொள்ளுதல் பற்றிய உரையுடன் முடிக்கப்பட்டது. இந்த உரை அனைவராலும் நன்கு வரவேற்கப்பட்டது. மேலும், பெரும்பாலான ஆசிரியர்கள், இதற்கு முன்பு இப்படிப்பட்ட கருத்துக்களைக் கேட்டதேயில்லை என்று வியந்துரைத்தனர்.

இக்கூட்டத்தின்போது, வரவேற்புக் கூட்டங்களுடன் ஒப்பிடுகையில், சிறிய குழுக்களுடன் கலந்துரையாடுவது மிகவும் எளிதானது என்பது கவனத்திற்கு வந்தது. சுமார் பதினைந்து ஆசிரியர்கள் பங்குபெற்ற இந்நிகழ்ச்சி, ஒன்றரை மணிநேரம் நீடித்து, ஒரு கேள்வி-பதில் பகுதியுடன் முடிவுற்றது.

## மாணவர்களும் இளைஞர்களும், கொல்கத்தா

ஆகஸ்ட் 12-ம் தேதியன்று, கொல்கத்தா ஆசிரமத்தில், ஹெரிடேஜ் தொழில்நுட்ப நிறுவனத்திலிருந்து வந்திருந்த, புதிய ஆர்வலர்களுக்கான வரவேற்புக் கூட்டம் ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. வரவேற்புரையைத் தொடர்ந்து, கொல்கத்தா மையப்பொறுப்பாளரான, சகோ. மிசல் மேஹ்தா அவர்கள், சகஜ மார்க்கத்தின் அடிப்படைகளைப் பற்றி விரிவாக எடுத்துரைத்தார். அவர், மனிதன் எவ்வாறு தனது 'சமூகப் பொருளாதார வட்டத்தை' தன்னுடைய உண்மையான உலகமாக எண்ணிக்கொண்டு, அதனால் 'இயற்கையின் படைப்பிலிருந்து' அந்நியப்படுகிறான் என்பது பற்றிய கலந்துரையாடலுடன் துவங்கினார். பின்பு, யோகா மற்றும் தியானத்தைப் பற்றி மேலோட்டமாக கூறிவிட்டு, பல உதாரணங்களைக்கொண்டு இவ்விரண்டையும் பற்றி விளக்கினார்.

இதனைத் தொடர்ந்து, பொறியாளர்களாகப் பணியாற்றும் நான்கு இளம் அப்யாசிகள், சில நிமிடங்களுக்கு பேச அழைக்கப்பட்டனர். அவர்கள், தாங்கள் மிஷனில் சேர்ந்ததற்கான காரணத்தைப்பற்றியும், இதுவரையிலான அவர்களது அனுபவத்தைப்பற்றியும், பகிர்ந்துகொண்டனர். இந்நிகழ்ச்சி, ஒரு சிறிய கேள்வி-பதில் பகுதியுடன் முடிவுற்றது. இதில் கலந்துகொண்ட சுமார் எழுபது பேர்களுக்கு, சகஜ மார்க்க அறிமுகத் தகவல் குறிப்பேடு வழங்கப்பட்டது. வந்திருந்தவர்களில், முப்பது பேர், ஹெரிடேஜிலிருந்து வந்திருந்த மாணவர்களாவர். மற்றவர்கள் பிற புதிய ஆர்வலர்கள் மற்றும் அப்யாசிகளாவர்.

## காவல்துறை அதிகாரிகளுக்கு ஆற்றப்பட்ட உரை, மைசூர்

ஆகஸ்ட் 16-ம் தேதியன்று, மைசூரிலுள்ள, கர்நாடக காவல்துறை பயிற்சிக் கல்லூரியில், அடிப்படைப் பயிற்சியை எடுத்துக்கொள்ளும், நேரடியாகப் பணியில் சேர்க்கப்பட்ட, 39 காவல்துறை துணைக் கண்காணிப்பாளர்கள், மற்றும் 19 துணை ஆய்வாளர்கள் ஆகியோருக்கு உரையாற்றும்பொருட்டு, மிஷனின் இணைக் காரியதரிசியான, சகோ. A.P. துரை அவர்கள் அழைக்கப்பட்டிருந்தார். அப்போது, காவல்துறை தலைமை ஆய்வாளரும், பயிற்சிக் கல்லூரியின் இயக்குநருமான, திரு. அமர் குமார் பாண்டே, IPS அவர்கள், பேச்சாளரை அறிமுகப்படுத்தி, அவர் கர்நாடகாவில் காவல்துறை அதிகாரியாக இருந்தபோது, மற்றவர்களுக்கு முன்மாதிரியாக இருந்ததைப்பற்றி குறிப்பிட்டு, 1996-1997 வரை, மாநிலத்தின் காவல்துறை தலைமை இயக்குநராக, அவர் படைத்த சாதனைகளைப் பட்டியலிட்டார்.

சகோ. துரை அவர்கள், "காவல்துறை அதிகாரிகளுக்கான பண்பியல்பு மற்றும் தனிச்சிறப்பியல்பு மேம்பாடு" என்ற தலைப்பில் பேசினார். இந்த கண்ணோட்டத்திலான மாஸ்டரது போதனைகளிலிருந்து மேற்கோள் காட்டி, நம் வாழ்வில் கர்மவினை எவ்வாறு செயல்படுகிறது என்பதை வலியுறுத்தி, நமது அனைத்து எண்ணங்கள் மற்றும் செயல்களின் பின்விளைவுகளுக்கு, ஏன் நாம் மட்டுமே பொறுப்பாகிறோம் என்று விளக்கினார். சகோ. துரை அவர்கள், தனது சொந்த கூர்ந்தறிதல்கள், மற்றும் தனது காவல்துறை பணிக்காலத்தின்போது கிடைத்த அனுபவங்களிலிருந்து, இந்த கோட்பாட்டை எடுத்தியம்பினார். ஒருவர் தனது உள்முக சுயத்தின்மீது கவனம் செலுத்தி, அச்சமோ பாரபட்சமோ இன்றி, தன் கடமைகளை ஆற்றவேண்டுமென்று அவர் விடுத்த அழைப்பு, அவர்கள் மனதில் பதிந்ததாகத் தெரிந்தது.

ஏசுநாதரின் கூற்றுகள், மற்றும் பகவத் கீதையிலிருந்து எடுத்துக்கூறப்பட்ட மேற்கோள்கள் ஆகியன, பயிற்சிபெறுவோரால் நன்கு வரவேற்கப்பட்டன. பேச்சாளருடன் கலந்துரையாடி, தங்களது கருத்துக்களையும், கேள்விகளையும், வெளிப்படுத்துமாறு அவர்கள் உற்சாகப்படுத்தப்பட்டனர். இந்தப் பகுதி,

90 நிமிடங்களுக்கு நீடித்தது. மாஸ்டருடைய பிரசன்னமும், ஊக்கமும் அந்நிகழ்ச்சி முழுவதும் உணரப்பட்டது.



அவர்கள் அளித்த பதிலுரை, நேர்மறையாக இருந்ததோடு, சிலர் சிட்டிங்குகள் எடுத்துக்கொள்ளவும் விருப்பம் தெரிவித்திருக்கின்றனர்.

## திருப்பூர் ஆசிரமத்தில் வரவேற்புக்கூட்டம்

திருப்பூர், செட்டிபாளையம் யோகாசிரமத்தில், தன்னார்வலர்கள் குழுவினரால், ஒரு சுற்றறிக்கை முன்கூட்டியே வழங்கப்பட்டு, ஆகஸ்ட் 12அன்று, சுமார் 75 அழைப்பாளர்கள் வரவேற்கப்பட்டனர். மையப்பொறுப்பாளர் சகோ.ரவி சுப்பையன், விருந்தினர்களை வரவேற்று, பயிற்சியினைத் துவங்குவதற்குத் தேவைப்படுபவனவற்றைப் பற்றி விளக்கினார். ஒரு சில தன்னார்வலர்கள், மிஷனுக்குள் தாங்கள் வருவதற்கு வழிகாட்டுதலாக இருந்த சூழ்நிலைகளைப் பற்றியும், பயிற்சியின் நன்மைகளை தாங்கள் எவ்வாறு உணர்ந்தனர் என்பது பற்றியும் தங்களுடைய அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டனர்.

அன்றைய தினமே, 50 அழைப்பாளர்கள் தங்களது முதல் சிட்டிங்கைப் பெற்றுக்கொண்டனர். சிட்டிங்குகள் அனைத்தும் முடிவடைய, மாலை 4 மணி வரை ஆயிற்று. இது போன்றதொரு சிறந்த நிகழ்விற்கு, மாஸ்டரது அருள் மட்டுமே காரணமாக இருக்கமுடியும் என்பதை ஒவ்வொருவரும் உணர்ந்து கொண்டனர்.

## இளைஞர் நிகழ்ச்சி, மைசூர்

ஐக்கிய நாடுகளின் உலக இளைஞர் தினமான ஆகஸ்ட்12, 2012, அன்று, சுமார் 30 இளைஞர்கள், முந்தைய நாள் மாலை, பெங்களூரில் இருந்து புறப்பட்டு, மைசூர் ஆசிரமத்தைச் சென்றடைந்தனர். பயணத்தின் பொழுதும், இரவு உணவின் பொழுதும், ஒருவரையொருவர் தெரிந்துகொள்ளும் வாய்ப்பைப் பெற்றனர். ஒவ்வொருவரும், தாங்கள் சற்று முன்னரே சந்தித்த ஒருவரை அறிமுகப்படுத்துமாறு கேட்டுக்கொள்ளப்பட்டனர். இதனைத் தொடர்ந்து, உலகளாவிய பிரார்த்தனையும், அதற்குப் பிறகு "கிங்ஸ் ஸ்பீச்" என்ற திரைப்படமும் திரையிடப்பட்டது.

அடுத்த நாள், காலை தியானத்திற்குப் பிறகு, கிரிக்கெட், ஆசிரமத்தில் நீண்ட நடைப்பயிற்சி, மற்றும் சில விளையாட்டுகள் ஆகியவை இருந்தன. மைசூர் மையத்திலிருந்த சில இளைஞர்களும் இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர். சத்சங்கம் மற்றும் காலை உணவிற்குப் பிறகு, 9.30 மணியளவில், ஒமேகா பள்ளியின் முன்னாள் மாணவர்களிடையே மாஸ்டர் ஆற்றிய உரையின் ஒளிபரப்புடன் நிகழ்ச்சி துவங்கியது. உரையின் மீதான கலந்துரையாடலை சகோதரி.ப்ரியா ஹெக்டே எளிமையாக்கினார்.

பங்கேற்பாளர்கள் இரண்டு குழுக்களாகப் பிரிக்கப்பட்டனர். ஒவ்வொருவருக்கும் ஒரு உருளைக்கிழங்கு கொடுக்கப்பட்டு, அதை தங்களுடைய நண்பராக நினைத்துக்கொண்டு, குழுவில் அவரை அறிமுகப்படுத்துவதற்கு ஒரு கதையை உருவாக்குமாறு கூறப்பட்டனர். இக்கதைகள், சிந்தனை, படைப்பாற்றல் மற்றும் நகைச்சுவையோடு தொடர்புடையதாகவும், ஆன்மீகம் மற்றும் பொருள்சார்ந்த வாழ்வின் நோக்கங்கள் கலந்தவையாகவும் இருந்தன. ஒரு இடைவேளைக்குப் பிறகு, "தேர்ந்தெடுத்துப் பேசு" என்ற நிகழ்வு நடைபெற்றது. ஒவ்வொருவரும் இரண்டு நிமிடங்கள் பேசக்கூடிய வகையில், மாஸ்டருடைய மேற்கோள்கள் ஒவ்வொருவருக்கும் கொடுக்கப்பட்டது. பிறகு, பொது அறிவு வினாடி வினா நிகழ்விற்காக, குழுவானது பல்வேறு அணிகளாக பிரிக்கப்பட்டது. இந்நிகழ்வினை சகோதரி. அனன்யா நடத்தினார்.

மொத்தத்தில், நிகழ்ச்சியானது, மிகவும் சுருக்கமாகவும், துல்லியமானதாகவும், பயனுள்ளதாகவும், அனைவருக்கும், தன்னைத்தானே சுய ஆய்வு செய்து கொள்வதற்கும், சகோதர, சகோதரிகளிடையே கருத்துக்களைப் பகிர்ந்து கொள்ளவும் ஒரு வாய்ப்பாக அமைந்தது.




## ஓவியம் தீட்டும் நிகழ்ச்சி, பில்வாரா, ராஜஸ்தான்

8 முதல் 16 வயது வரை உள்ள குழந்தைகளுக்கு "இயற்கை" என்ற தலைப்பில் ஒரு ஓவியம் தீட்டும் நிகழ்ச்சிக்கும், 18 முதல் 30 வயது வரை உள்ள இளைஞர்களுக்கு "எதிர்பார்த்தல்" என்ற தலைப்பில் ஒரு கட்டுரைப் போட்டிக்கும் கோடை விடுமுறையின் போது ஏற்பாடு செய்யப்பட்டு இருந்தது. அதற்கான முடிவு ஜுலை 8ம் தேதி அன்று அறிவிக்கப்பட்டது. அனைத்து ஓவியப் படைப்புகளும் தியானக்கூடத்தில் பார்வைக்கு வைக்கப்பட்டு இருந்தன. ஒரு குழந்தை, ஒரு கிராமத்து மனிதர், ஒரு நகர்ப்புறத்து மனிதர் மூவரும் இயற்கையை பார்க்கும் விதத்தை, மாறுபட்ட வழிகளில் வரைந்திருந்த ஒரு பங்கேற்பாளரின் ஓவியம், ஒவ்வொருவரின் கவனத்தையும் ஈர்த்தது.

## இளைஞர் நிகழ்ச்சி, கொல்கத்தா, மேற்கு வங்காளம்

18 முதல் 35 வயதிற்குட்பட்ட சுமார் 100 அப்யாசிகள், கொல்கத்தா ஆசிரமத்தில் இருக்கின்றனர். இருப்பினும், அவர்களில் 15 முதல் 20 நபர்களே, ஞாயிறு சத்சங்கத்தில் கலந்து கொள்ளுதல் மற்றும் ஆசிரம செயல்பாடுகளில் பங்கெடுத்தல் உள்ளிட்ட நிகழ்வுகளில் முனைப்பாக ஈடுபடுகின்றனர். அவர்களை ஒருங்கிணைக்கவும், செயல்பாடுகளில் பங்கு கொள்ளத்தூண்டுவதற்குமான முயற்சியில், சில அப்யாசிகள் ஒருங்கிணைந்து, திட்டமிட்டு செயலாற்ற முடிவெடுத்தனர்.

குழுவின் தகவல் குறிப்புகள் உட்பட பல்வேறு ஆலோசனைகள் பெறப்பட்டன. ஒவ்வொரு வாரமும், சத்சங்கத்திற்குப் பிறகு, புத்தகம் வாசித்தல் நிகழ்விற்கு ஏற்பாடு செய்தல், கிரிக்கெட் போன்ற வெளிச்செயல்பாடுகளுக்கு ஏற்பாடு செய்தல் உள்ளிட்ட மேலும் பல யோசனைகள் பெறப்பட்டன. அப்யாசிகள் தம்மைத்தாமே பதிவு செய்து கொள்வதற்கு ஊக்கப்படுத்தும் வகையில், தொடர்ந்து மூன்று ஞாயிற்றுக்கிழமைகளிலும்,இளைஞர்களுக்கானபணிமனைஒன்று ஏற்படுத்தப்பட்டிருந்தது.

பின்நிகழ்வாக, ஜுலை 2012 லிருந்து ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமைகளிலும், இரண்டு மணி நேரத்திற்கு கலந்துரையாடல்கள் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றன. இதன்மூலம் அப்யாசிகளின் எண்ணிக்கை மெதுவாக ஆனால் நிச்சயமாக அதிகரிக்கப்பட்டிருக்கிறது. இந்த நிகழ்ச்சிகள், சாதனாவின் முக்கிய அம்சங்களின் மீதான கலந்துரையாடல்கள், அப்யாசிகள், தங்களுள் கவனித்த மாற்றங்களைப் பற்றிய அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ள ஊக்குவிக்கப்படுதல், மற்றும், மாஸ்டரின் பல்வேறு உரைகளை குழுவாக அமர்ந்து வாசித்தல் ஆகியவற்றைக் கொண்டதாக உள்ளன. மாஸ்டரின் வழிகாட்டுதலின் கீழ், இந்தக் குழு நன்கு வளர்ச்சியடையும் என நாம் நம்பிக்கை கொள்வோம்.



# தில்லி மண்டல ஆசிரமம்

ஒளி மையம்





தில்லி நகரின் மையத்தில், R.K. புரத்தில் ஒரு ஆசிரமம் உள்ளது. இன்னொன்று, தில்லி - ஹரியானா எல்லையில் அமைந்துள்ள, கூர்காவ் என்று பொதுவாக அழைக்கப்படும் மண்டல ஆசிரமம் ஆகும். இது சர்வதேசவிமான நிலையத்தில் இருந்து 12கி.மீ. தொலைவிலும், உள்நாடு விமான நிலையத்தில் இருந்து, 15கி. மீ. தொலைவிலும் உள்ளது.

2001ம் ஆண்டு, ஜூன் 15ம் தேதி, 6.5 ஏக்கர் பரப்புள்ள ஆசிரமம், மாஸ்டரால் துவக்கிவைக்கப்பட்டது. தியான மண்டபத்தில், சுமார் 2000 அப்யாசிகள் அமரக்கூடும். ஆரம்பத்தில், மணப்பாக்கம் ஆசிரமத்தின், கல்நார் (ஆஸ்பெஸ்டாஸ்) கூரையும், எஃகு உத்தரங்களும், இந்த ஆசிரமத்தின் கூரைக்குப் பயன் படுத்தப்பட்டன. எனினும், சீரமைப்புப் பணியின் போது, கல்நார் தகடுகள், உலோகத்தால் ஆக்கப்பட்ட தகடுகளால் மாற்றப்பட்டன. மண்டபத்தின் உள்ளே, இருபுறமும், கூடுதலான விரிவாக்கம் செய்யப்பட்டது. கோடை காலத்தில், அனல் பறக்கும் சூடாய் இருக்கும்போது, மேல் கூரையை ஈரமாக்க, நீர் தெளிக்கும் இயந்திரம் ஒன்று உள்ளது. இன்னும் கூடுதலாக, கூரையானது, வெப்பம் கடத்தாப்பொருள்களினால் மூடப்பட்டு, தியான மண்டபத்தின் உள்ளே, வெப்பம் வெகுவாகக் குறைக்கப்பட்டு உள்ளது.



மாஸ்டரின் அலுவலகம், தியானக்கூடத்தின் ஒரு புறத்தில், பச்சைப்பசேலென்ற புல்வெளியைப் பார்த்தவாறு அமைந்துள்ளது. மாஸ்டர் வருகை புரியும்போது, இங்கு அமர்வது வழக்கம். 2008, ஏப்ரல் 20 அன்று, மாஸ்டர் இந்தக் கட்டிடத்தைத் திறந்து வைத்து, முன்புறம் இரண்டு மரக்கன்றுகளையும் நட்டார். துரோணாச்சாரியாரின் ஒரு சிலையையும் அவர் திறந்துவைத்தார், கூர்காவ் (குரு + காவ்) என்ற பெயர், அவர் (துரோணர்) பெயரிலிருந்து வந்ததாக நம்பப்படுகிறது.



ஆசிரமத்தின் ஒரு மூலையில், பெரிய சமையலறை ஒன்று உள்ளது. அதன் ஒரு பகுதி, சிற்றுண்டிச்சாலையாகச் செயல்படுகிறது. நவின கழிப்பறைத் தொகுதி ஒன்றும் உள்ளது. பெரிய கூட்டங்களின் போது, கூடுதலான கழிப்பறைகள் அமைக்கவும் இடவசதி உள்ளது. வாகனங்கள் நிறுத்தவும் போதுமான இடம் ஆசிரமத்தில் உள்ளது. பிரதான நுழைவாயில்களுள் ஒன்றின் அருகில், குழந்தைகள் மையமும், புத்தகக் கடையும் உள்ளன. வெளியில், குழந்தைகள் விளையாடுவதற்கான இடமும் உள்ளது. ஆசிரமத்தின், பாதிக்கு மேற்பட்ட பகுதியில், கரிம விவசாய முறையில், (organic farming), பருவகால காய்கறிகள் விளைவிக்கப்படுகின்றன. நான்கு தோட்டக்காரர்களும், ஒரு பொறுப்பாளரும் தம் குடும்பத்தினருடன் ஆசிரமத்தில் வசிக்கின்றனர். மிஷின் வெளியிடும் நூல்கள், அருகில் உள்ள மையங்களுக்கு, இங்கிருந்துதான் விநியோகிக்கப்படுகின்றன. மாதத்தின் முதல் ஞாயிற்றுக்கிழமையன்று, முழுநாள் நிகழ்ச்சி நடைபெறுகிறது.



மாஸ்டர், 2009, மே 31ம் தேதி அன்று, ஆசிரமத்தில் சத்சங்கம் நடத்தியபின், உலகளவில், சத்சங்கம் நடைபெறும் நேரத்தை, காலை 7.30 மணி என்று மாற்றினார். மாஸ்டர், மனிதவாழ்வின் நோக்கத்தை வலியுறுத்தி, "நாம் வாழ்வில் செய்யும் ஒவ்வொரு காரியமும் - சுவாசித்தல், சாப்பிடுதல், பருகுதல், வேலை செய்தல், இளைப்பாறுதல், தூங்குதல் - இவையனைத்தும், வாழ்தல் என்ற விதிமுறைக்கு இணங்கியே இருக்கவேண்டும். வாழ்தல் என்பது,ஒரேஒரு குறிக்கோளுக்காக மட்டுமே. அதாவது, நான் மனித நிலையிலிருந்து பரிணமித்து, தெய்வீக நிலை எனக்கூறப்படும் நிலையை அடைவதுதான். இத்தகைய உணர்வை உங்கள் அனைவரிடத்திலும் திரும்பவும் கொண்டுவர நான் விரும்புகிறேன்", என்று கூறினார்.



**To download or subscribe to this newsletter, please visit http://www.sahajmarg.org/newsletter/india For feedback, suggestions and news articles please send email to in.newsletter@srcm.org**

© 2011 Shri Ram Chandra Mission ("SRCM"). All rights reserved. "Shri Ram Chandra Mission", "Sahaj Marg", "SRCM", "Constant Remembrance" and the Mission's Emblem are registered Trademarks of Shri Ram Chandra Mission.This Newsletter is intended exclusively for the members of SRCM. The views expressed in the various articles are provided by various volunteers and are not necessarily those of SRCM.